க்ாசூதேீவிரமான சிந்தனையைச் செலுத்த வேண்டும். கர்மபஅரசாங்கம் அதிகமாக மின்சாரம் கொடுக்க முடியா விட்டால் ஆந்திரத்திலிருந்து பெற முயல வேண்டும். எண்ணூரி லிருந்தும், நெய்வேலியிலிருந்தும் கிடைக்கக்கூடிய மின்சாரம் தடைப்படுகிற செய்தி விவசாயிகளுக்குப் பீதியாக இருக்கிறது. முழுக்கவனம் செலுத்தி மின்சார நிலையைச்சரிப்படுத்த வேண்டும்.

இரண்டு கோரிக்கைகளை விடுக்க விரும்புகிறேன். முதல்வர் அவர்கள் எழுத்தாளர். எழுத்தாளர்கள் கொண்ட அமைச்ச ரவையை அமைத்திருக்கிறார்கள். பல முறை சொல்லியிருக் கிறேன். நாட்டிலே யார் யாருக்கோ பாதுகாப்பு இருக்கிறது. எழுத்தாளர்கள் நிறுவனம் ஒன்றை அமைத்து அவர்கள் எழுதும் நூல்களை வெளியிட வழி செய்ய வேண்டும். இப்போது தனிப் பட்ட புத்தகம் வெளியிடுவோர் ராயல்டியை ஏமாற்றுகிறார்கள். ஆகவே, அப்படி ஒரு தனி நூல் நிறுவனம் ஏற்படுத்தி அந்த வகையில் நல்லவர்களின் தரமான நூல்களை ஆராய்ந்து வெளி யிட்டு அரசாங்கமே ஆயிரம், இரண்டாயிரம் பிரதிகளை விற்பனை செய்ய வழிவகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த அளவில் நிதி ஒதுக்கீடு தேவையான அளவு இல்லை. சென்ற ஆண்டும் பாதிக்கப்பட்டோம். சென்ற ஆண்டும் மழை இல்லை. இந்த ஆண்டும் மழை இல்லை. 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியது முழுவதும் செலவாகிவிட்டது. வளர்ச்சி மன்றக் கூட்டத் தீர்மானத்தின் படி கேட்ட $4\frac{1}{2}$ கோடி ரூபாயில் இரண்டு கோடி ரூபாயாவது தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியபாளையத்தில் அணைக்கட்டுத் திட்டத்தினை நிறை வேற்ற வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

9. தன்னிலை விளக்கம்.

முதலமைச்சர் எழுப்பிய ஒரு வினாவிற்கு தான் விளக்கம் அளித் திருந்தும், தான் பதில் கூறவில்லையென ''தமிழ்முரசு'' நாளேட்டில் வெளியிடப்பட்டது குறித்து திரு. பெ. சீனி வாசன் அவர்களது விளக்கம்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஒரு சிறு பிரச்சினை. நேற்றைய தினம் நடந்த விவாதம் பத்திரிகையில் வெளியிடும்போது 'தமிழ் முரசு' என்ற பத்திரிகை தவறான முறையில் என்னுடைய பெயரைக் களங்கப்படுத்தும் நோக்கத் தோடு செய்தியை வெளியிட்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் பேச்சைப் போட்டுவிட்டு அதற்குக் கீழே இரண்டு வரி எழுதி யிருக்கிறார்கள். அதை நான் படிக்கிறேன்—

''முதல்வர் : சபாநாயகர் அறையில் எம்.எல்.ஏ.-க்கள் எல்லாம் வந்து டெலிபோன் செய்ததாகச் சொல்கிருர். இருக்கட்டும், சரி, அறையை விட்டு விடுவோம். வீட்டுக்கு என்ன ஆயிற்று? எட்மண்ட் துணைத் தலைவராக இருந்தபோது அவர் வீட்டு டெலிபோன் கட்டணச் செலவு ரூ. 1,000 தான். நீங்கள் துணைச் சபாநாயகராக இருந்தபோது வீட்டிற்கான டெலிபோன் கட்டணம் ரூ. 10,000 ஆகியிருக்கிறதே''

என்று போட்டுவிட்டு அதற்குக் கீழே 'சீனிவாசன் இதற்குப் பதில் கூறவில்லை' என்று போட்டிருக்கிறது.

மற்றப் பத்திரிகைகள் எல்லாம் நான் கூறிய பதிலைப் போட்டிருக்க 'தமிழ் முரசு' பத்திரிகையில் வேண்டுமென்றே என் பெயரைக் கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு போட்டிருக்கிருர்கள். தாங்கள் அந்தப் பத்திரிகைக்கு அறிவுரை கூறினுல் போதும். நான் உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகைகள் செய்தியைப் போடும்போது முழுமையாக இருக்க வேண்டும்...

திரு. நா. வீராசாமி : முதலமைச்சர் பேசியதைப் பல பத்திரிகைகள் அந்த மாதிரிப் போடுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக எல்லாப் பத்திரிகைகளுக்குந்தான் கூறுகிறேன். பப்ளிகேஷனுக்கு ப்ரொட்டக்ஷனே அப்போதுதான்.

திரு. என். எஸ். பலராமன் : சட்ட மன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றித் 'தென்னகம்' பத்திரிகையில் எப்படிப் போடுகிருர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பொதுவாக எல்லாப் பத்திரிகைகளுக்கும் சொல்லுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: நான் அப்படிப் பாதி போடுவதைப் பற்றிச் சொல்லவில்லை. 'சீனிவாசன் பதில் சொல்லவில்லை' என்று செல்வாக்கான பத்திரிகை போடுகிறதே என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இனிமேல் அந்த மாதிரி நடந்தால் பிரிவிலேஜ் ஆக எடுத்துக் கொள்ளலாம்.